# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2011/2012

**ED / S 3213 கற்பித்தல் முறைகளும் நுட்பங்களும் (Teaching Methods & Techniques)**

LIBRARY
4 MAY 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

நேரம் 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

1. அ. வகுப்பறைமட்டத் தொடர்பாடல் செயன்முறையைச் சிறப்பாக மேற்கொள்ளக் கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ. வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் மாணவர்களின் புலக்காட்சித்திறன் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் அகவய, புறவயக் காரணிகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

   ~~இ. வகுப்பறைமட்டத் தொடர்பாடல் செயன்முறையைச் சிறப்பாக மேற்கொள்ளக் கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)~~

2. அ. "வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்களின் ஒரு பாடவிடயத்தினூடாக எதிர்பார்க்கும் கற்பித்தலின் நோக்கம், அடைய உத்தேசிக்கும் கற்பித்தல் மாதிரி, இதனூடாகக் கையாளப்பட வேண்டிய கற்பித்தல் முறை ஆகியன வினைத்திறனான கற்பித்தலின் அடிப்படைக் கூறுகளாகும்." இது பற்றிய உமது கருத்தினை முன்வைத்து விளக்குக. (15 புள்ளிகள்)

   ஆ. அறிவுசார் உளவியல் கோட்பாடுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட கற்பித்தல் மாதிரியின் செயற்பாட்டினைச் சுருக்கமாக விளக்கி, இதன் கல்வி நோக்கங்கள் நான்கினைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

3. அ. கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது மூவழித் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டமாகும். இதனூடாக வகுப்பறையில் எவ்வாறு மாணவரின் நடத்தை மாற்றம் ஏற்படுகின்றது என்பதை விளக்குக. (07 புள்ளிகள்)

   ஆ. ஆரம்ப, இடைநிலைப், பாடசாலைகளில் அணிமுறைக்கற்பித்தல் சிறந்த வினைத்திறனுடையதாக அமைகின்றது. இதன் ஒழுங்கமைப்பு, செயற்பாடு பற்றி விளக்கி, இக்கற்பித்தலின் நன்மைகள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக. (5x2=10 புள்ளிகள்)

   இ. இடைநிலைப் பிரிவ மாணவர்களின் கற்பித்தலில் கலந்துரையாடல் முறை மூலம் கற்பித்தல் சிறந்த பயனுடையதாக அறியப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சங்கள் எட்டினைச் (8) சுருக்கமாக விளக்குக. (8x1=08 புள்ளிகள்)

4. அ. கற்பித்தலில் வினாக்களின் பயன்பாடுகள் ஐந்தினைச் எடுத்துக் கூறி அவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ. அசிரியர் வகுப்பறையில் வினாக்களைக் கேட்கும் முறையில் கடைப்பிடிக்க வேண்டிய குறிப்பிடத்தக்க அம்சங்கள் பத்தினை (10) எடுத்துக் கூறிச் சுருக்கமாக விளக்குக. (10x1=10 புள்ளிகள்)

இ. மாணவர்கள் கேட்கும் வினாக்களுக்கு, ஆசிரியரின் நடத்தையும், உளப்பாங்கும் வெற்றிகரமான கற்பித்தலுக்குப் பொறுப்பாக உள்ளன. இதனடிப்படையில் ஆசிரியர் வெளிப்படுத்தும் சிறப்பான நடத்தைகள் ஐந்தினை (5) விளக்குக. (5x1=5 புள்ளிகள்)

5. அ. சிந்தனையின் மிக உயர்ந்த கட்டமான ஆய்வுச் சிந்தனையின் மூலம் ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கட்டங்களைப் பட்டியற்படுத்துக. (10 புள்ளிகள்)

ஆ. கல்விச் செயற்பாட்டில் சிறந்த ஒப்படை கொண்டிருக்க வேண்டிய அம்சங்களை முன்வைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

இ. முன்திட்டமுறைக் கற்பித்தல் என்றால் என்ன? இதன் மூலம் நேர்த்திட்டமொன்றில் அடங்கியிருக்க வேண்டிய பண்புகள் நான்கினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

6. அ. செயறிறிட்டமுறைக் கந்பித்தல் என்றால் என்ன? இதன் முக்கிய நான்கு படிகளையும் சுருக்கமாக, உதாரணத்துடன் விளக்குக. (09 புள்ளிகள்)

ஆ. குறித்த நோக்கங்களை அடைவதற்காக ஆசிரியர் பாடத்தைத் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் எட்டினைக் (08) கூறி உமது கருத்துக்களை முன்வைக்குக. (8x1=08 புள்ளிகள்)

இ. கலைத்திட்டம், பாடத்திட்டம், வேலைத்திட்டம், பாடக்குறிப்பு இவற்றுக்கிடையிலான தொடர்பினை எடுத்துக் கூறுக. (08 புள்ளிகள்)